மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்தை நான் ஏற்கெனவே பெற்று இருக்கிறேன். எனது தீர்ப்பை இப்போது வழங்குகின்றேன். மாண்புமிகு சமூகநல அமைச்சர் அவர்கள் ''முதல்வர் போட்ட பிச்சை'' என்ற கூற்றை ''இரத்தல்'' என்ற பொருளில் கூறினார் என்று எடுத்துக்கொள்ளாது, எளிமைப் பொருளாக ''humility'' என்று எடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் அரசியல் அமைப்புச் சட்டம், 164-வது பிரிவின் கீழ், ஆளுநரால் முதல் அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்கள் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களும் நியமிக்கப்படுகிறார்கள் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, அமைச்சர்கள் நியமிக்கப்படுவது முதல் அமைச்சர் அவர்களின் முழு அதிகாரமும், விருப்பமும் ஆகும். ஆகவே, ''முதல் அமைச்சர் போட்ட பிச்சை'' என்பதை இழிவாக எடுத்துக் கொள்ளாமல், அமைச்சர் அவர்களின் எளிமையை எடுத்துக் காட்டுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, இதில் அவை உரிமை மீறல் எதுவும் இல்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(4) (அ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி பற்றியும், அக் கல்லூரி மூடப்பட்டிருப்பது குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, பாளையங்கோட்டையிலுள்ள இந்திய முறை அரசு மருத்துவமனை கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி பற்றியும் அக்கல்லூரி மூடப்பட்டிருப்பது பற்றியும், அதனால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்க பேரவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, துரைமுருகன் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒற்றிவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதை சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா. திரு. துரை முருகன் அதே கட்சியைச் சேர்ந்தவர். ஆதலால் அவர் தனியாக விளக்கம் அளிக்க வேண்டாம்.

திரு, ஜே. ஜேம்ஸ் : திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பாளையங்கோட்டையிலுள்ள இந்தியமுறை அரசு மருத்துவமனை கல்லூரி மாணவர்கள் கிளர்ச்சி பற்றியும், அக்கல்லூரி

மூடப்பட்டிருப்பது பற்றியும், அதனுல் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்க வேண்டும் என்று நான் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்திருந்தேன்.

பாளையங்கோட்டை அரசினர் இந்திய முறை மருத்துவ கல்லூரி கால வரையின்றி மூடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இந்திய முறைக்கு குறிப்பாக சித்த மருத்துவ முறைக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்பது நம்முடைய கொள்கையாகும். அந்த அடிப்படையிலேதான் இந்த சித்த மருத்துவக் கல்லூரி பாளையங்கோட்டையிலே ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் கல்லூரியிலே படிப்பது 150 பேர்கள் தான். 150 பேர்களே படிக்கின்ற இந்தக் கல்லூரி மாணவர்கள் சில முக்கியமான கோரிக்கைகளை வைத்திருக்கிருர்கள்.

அதிலே முக்கியமானது இந்தக் கல்லூரியிலே படித்து வெளி வருகிற மாணவர்களுக்கு மாவட்ட மருத்துவ நிலையங்களில் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும், இங்கே படிக்கின்ற மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்ற சில முக்கியமான கோரிக்கைகளை வைத்திருக்கிருர்கள். வேலை நிறுத்தத்தை ஆரம்பித்திருக்கிருர்கள். இந்தப் பிரச்சினையை சுமூகமாக முடித்து வைக்க கல்லூரித் தலைவரோ அல்லது அரசாங்கமோ தலையிட்டு சரியான முடிவு செய்யாத காரணத்தாலே கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டிருக்கிறது. அந்த 150 பேர்கள் படிக்கின்ற இந்தக் கல்லூரி இவ்வளவு நாட்களாக மூடப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் எந்த அளவுக்கு அசட்டையாக, அலட்சியமாக இந்த அரசால் இந்தப் பிரச்சினை கருதப்பட்டிருக்கிறது என்ற நிலையை எடுத்துச் சொல்லி, அதன் காரணமாக இந்த அவையை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இதே விஷயத்தைப் பற்றி நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்த போது, அதை கவன ஈர்ப்புத் தீர்மானமாகத் தான் கொண்டு வரவேண்டுமென்று சொல்லி விட்டார்கள். ஆனுல் இப்போது பார்த்தால் மற்ற உறுப்பினர்கள் இதுகுறித்து 42-வது விதியின் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளதை அனுமதித்திருக்கிருர்கள். என்னுடைய தீர்மானத்தை மட்டும் மாற்றவேண்டிய அவசியமென்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது அந்த விவரம் என்னிடமில்லை. என்னுடைய அறைக்கு வந்தால் பதில் சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் விரும்பினுல், அவருடைய பெயரையும் இதில் சேர்த்துக் கொள்கிறேன். அவரும் இதில் பேசலாம்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, நான் கொடுத்ததை மட்டும் 41-வது விதியின் கீழ் போட வேண்டும் என்று சொல்லவேண்டிய அவசியம் என்ன என்ற விவரத்தைத் தெரிவிக்கும்படிதான் வேண்டுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : அவைத்தலைவரவர்களே, இந்திய முறை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் எம்.பி.பி.எஸ். மாணவர்களைப் போன்று 5 ஆண்டுகள் படிக்கின்றார்கள். ஆனால் எம்.பி. பி.எஸ். படிப்பு படித்த டாக்டர்களுக்கு ஒரு சம்பளமும், இந்திய முறை மருத்துவம் படித்த டாக்டர்களுக்கு வேறு சம்பளமும் இருக்கிறது. இந்திய முறை மருத்துவம் படித்தவர்களுக்கு சம்பளம் 200 ரூபாய் குறைவாக கொடுக்கப்படுகிறது. அதே போன்ற இந்திய முறை மருத்துவம் படித்த ஹவுஸ் சர்ஜன்களுக்கு 100 ரூபாய் குறைவாக ஊதியம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு வேலை வாய்ப்பும் அதிகமாக இல்லை. இப்படிப்பட்ட காரணங்களால், இந்திய முறை மருத்துவ மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது பாளையங்கோட்டையில் உள்ள அந்தக் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக, இந்தக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளிகள் மிகவும் அவதிப்படுகின்றார்கள். ஆகவே, இது ஒரு அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருப்பதால் அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இந்திய முறை மருத்துவக் கல்லூரி எனக்குத் தெரிந்த வரையில் இந்திய தேசத்தில் நமது மாநிலத்தில் மட்டும் தான் இப்போது இருக்கிறது. இந்த இந்திய முறை மருத்துவம் அழிந்து விடக்கூடாது என்பதற்காகத் தான், இதற்கு முன்பிருந்த அரசு இந்தக் கல்லூரியை திறந்து நடத்தி வருகின்றது. இந்தக் கல்லூரி இன்னும் சிறப்பாக நடத்தப்பட வேண்டும். அதற்கு இந்த அரசு தேவையான ஊக்கம் அளிக்க வேண்டும். ஒரு மாத காலமாக இந்தக் கல்லூரி மூடப்பட்டிருப்பது வருந்தத்தக்கது. உடனடியாக இந்தக் கல்லூரியை மீண்டும் திறக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்தத் தான், இந்தத் தீர்மானத்தை விவாதிக்க இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்போது அல்லோபதி டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று வேலை செய்ய விரும்பாத காரணத்தால், அதிகமான ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் கிடைக்காமல் உள்ளது. இந்த நிலையில் சித்த வைத்திய ஆஸ்பத்திரிகள் இன்றைக்கு அதிகமாகத் துவங்கப்பட்டால் கிராம

மக்களுக்கு உதவியாக இருக்கும். இருந்த ஒரே ஒரு இந்திய முறை மருத்துவக் கல்லூரியும் இன்றைக்கு மூடப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரி மாணவர்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேருததால் கல்லூரி மூடப்பட்டிருக்கிறது. இந்த முறை டாக்டர்களுக்கு இப்போது ஆண்டுக்கு 5 பேருக்குத் தான் வேலை கிடைக்கிறது. ஆண்டு தோறும் 20 பேருக்காவது வேலை கிடைக்க வேண்டும். இந்தக் கல்லூரியைச் சேர்ந்த ஆஸ்பத்திரியில் போதிய படுக்கைகள் இல்லை. தற்போது இந்த இந்திய முறை மருத்துவம் படித்துள்ள ஹவுஸ் சர்ஜன்களுக்கு எம்.பி.பி.எஸ். டாக்டர்களுக்கு கிடைக்கின்ற நியாயமான ஊதியம் கூட கிடைக்கவில்லை. கிராம மக்களுக்கு மேலும் குறைந்த செலவில் வைத்திய வசதி கிடைக்கப் பெறச் செய்ய வேண்டிய நேரத்தில், இருக்கின்ற ஒரே ஒரு இந்திய முறை மருத்துவக் கல்லூரியும் மூடப்பட்டிருப்பது, மக்களுடைய நலனுக்கு உகந்ததல்ல. ஆகவே இந்தப் பிரச்னையைக் குறித்து விவாதிக்க அவையின் இதர நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாளையங்கோட்டையிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரி 1968-ஆம் ஆண்டு 60 மாணவர்களைக் கொண்டு துவக்கப்பட்டது. இப்போது உள்ள மாணவர்களின் எண்ணிக்கை :

பி.ஐ.எம். பட்டப் படிப்பு	153
மேல் பட்டப் படிப்பு	15
விடுதி மருத்துவ அலுவலர்	36

இந்தக் கல்லூரியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை 46 (முதல்வர் உள்பட), இந்தக் கல்லூரியில் பணிபுரியும் விடுதி அலுவலர் 36 பேர் தங்களுடைய கோரிக்கையான ஆங்கில மருத்துவ அலுவலர்களுக்குச் சமமாக ஊதியம் தருதல்: அவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகப்படுத்துதல், சென்னையில் மற்ெருரு இந்திய மருத்துவக் கல்லூரி (சித்த முறை) துவக்குதல், மத்திய அரசு அலுவலகங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல், விடுதி மாணவர்களுக்குத் தேவையான கட்டிடங்களை கட்டித் தருதல், தொலை பேசி, பேருந்து வசதிகளை அளித்தல், புதிதாகத் துவங்கப்பட்டுள்ள பி.எஸ்.எம். அண்டு எஸ். ($5\frac{1}{2}$) ஆண்டு படிப்புக்கு தற்போது பி.ஐ.எம். படிக்கும் மாணவர்களையும் மாற்றிக் கொடுத்தல், பி.ஐ.எம். தேர்விற்கு உண்டான நுழைவுத் தகுதியை அதிகப்படுத்தல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி எந்த விதமான முன்னறிவிப்புமின்றி 12—7—77-லிருந்து வேலை நிறுத்தம் தொடங்கினர்.

1977 ஜூலை 28] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

(முற்பகல் 9-50)

அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையிலும் தங்களுடைய சில கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டும், பட்டப் படிப்பு, பட்ட மேல் படிப்பு மாணவர்கள் (மொத்தம் 168 பேர்) 14—7—1977-லிருந்து வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். பின்னர் 20—7—1977-இல் இருந்து அவர்கள் தொடர் உண்ணாவிரதம் துவக்கினார்கள். சமரச முயற்சி காண முயன்ற கல்லூரி முதல்வர் அவர்களிடமும் மாவட்ட ஆட்சியாளர் அவர்களிடமும் தங்கள் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு அரசு ஆணைகள் வரும் வரை தங்கள் வேலை நிறுத்தம் செய்வதாக மாணவர்கள் அறிவித்தார்கள். குடும்ப நலத் துறைச் செயலாளர் அவர்கள் மாவட்ட ஆட்சியாளர் அவர்களுடன் தொடர்பு கொண்டு சமரச முயற்சி காணும் பணியில் தீவிரமாக ஈடுபட கேட்டுக் கொண்டார்கள். இதற்கிடையில் இந்திய மருத்துவத் துறை இயக்குநரையும் பாளையங்கோட்டைக்குச் சென்று இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவு காணும்படிக் கேட்டுக்கொண்டார்கள். அதன்படி இயக்குநர் அவர்கள் பாளையங்கோட்டைக்குச் சென்று அனைத்து மாணவர்களையும் சந்தித்து அவர்களுக்கு அரசு நிலையை விளக்கிக் கூறினார். இதற்கிடையில் மாணவர் பிரதிநிதிகளும் கல்லூரி முதல்வரை சந்தித்து அவர்களிடம் கல்லூரியை மூட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். கல்லூரி முதல்வர் அவர்கள் இயக்குநர் அவர்களுடன் தொடர்பு கொண்டார். மாணவர்களை அமைதிப் படுத்த வேண்டியும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான முடிவு காண வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும், இயக்குநர் அவர்கள் ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்படுத்த வேண்டி, மக்கள் நல் வாழ்வுத் துறை செயலருடன் தொடர்பு கொண்ட பின் இக் கல்லூரி காலவரையரையின்றி மூடப்பட்டது. வேலை நிறுத்தம் நடந்த நேரங்களில் அனைத்து மாணவர்களும் எந்தவித வன்முறையிலும் ஈடுபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரியை மூடிய பிறகும் இயக்குநர் அவர்கள் மாணவர் பிரதிநிதிகளுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியதன் காரணமாக மாணவர்கள் கல்லூரிக்கு 10—8—77 அன்று திரும்பி வர இசைந்து எழுத்து மூலம் ஒப்புதல் தந்துள்ளார்கள்.

ஆகவே, இந்த நிலையில் இதற்காக இந்தச் சபையை ஒத்தி வைத்து விவாதத்தைத் தொடருவதற்கான அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.